அடைந்துவிடுகிறது. ஆகையால், குறைந்தது மூன்று நான்கு மாதங்களுக்குள்ளாவது அவற்றை எல்லாம் முடிவு செய்வதற்கு வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கூடியவரை சீக்கிரம் பென்ஷன் கொடுக்கவேண்டுமென்று கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டிற்குமேல் தாமதம் ஆனது 282 கேஸ்கள் தான். ஆயிரக் கணக்கான கேஸ்கள் ஒரு ஆண்டிற்கு முன்னமேயே முடிவு செய்யப்பட்டுவிட்டன. தாமதம் ஆனதற்குக் காரணம் தெரிவித்தேன். அரசாங்கம் இதில் கவனம் செலுத்திக்கொண்டுதான் வருகிறது. இதைக் கவனிக்கின்ற அலுவலர்களுக்கு விசேஷ பயிற்சி அளிப்பதற்கு உத்தேசம் இருக்கிறது என்று முன்பு சொன்னேன்.

புலவர் கா. கோவிந்தன் : ஓய்வு பெறுகின்றவர்கள் யார், யார் என்று முன்கூட்டியே தெரியும். ஓய்வு பெறுகின்றவர்களுக்கு 6 மாதம் அல்லது ஒரு வருஷத்திற்கு முன் கூட்டியே பென்ஷன் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க அரசாங்கம் எண்ணுகிறதா ? அப்படியானுல், அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஓய்வு பெறுவதற்கு முன்னமேயேதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஓய்வு பெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கு குறைந்தபட்சம் 20 ரூபாயாவது பென்ஷன் கொடுக்க வேண்டுமென்று ஏப்ரல் மாதத்திலிருந்தே அமலில் இருப்பதாக இதில் இருக்கிறது. ஆனுல் இதுவரையில் அப்படி வழங்கப்படவில்லை என்று தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானுல் அதற்கான காரணங்கள் என்ன ? அதைத் தவிர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதற்காக உத்தரவு போடப்பட்டிருக்கிறது. இது அடுத்த கேள்வியைச் சேர்ந்தது. இப்போதே விடை அளிக்கிறேன். அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. அதன்படி பென்ஷன் அளிக்கப்பட்டிருக்கிறது.

கனம் சபாநாயகர் : அடுத்த கேள்வியின் பதிலையும் இப்பொழுதே சொல்லிவிடுங்கள்.

* 142 *Q.*—SRI M. S. SELVARAJAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the basis under which pension of retired teachers is calculated; and

(*b*) whether it will be based on the entries made in the Service Registers of the teachers?

6th August 1966]

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) Pension is calculated on the basis of the length of qualifying service. Pension for each completed year of service is calculated at 1/120 of average emoluments drawn during the last three years of service subject to a maximum of 30/120 of average emoluments and the maximum is further limited to Rs. 60 per mensem in the case of L.T. or B.T. Assistants and similar categories and Rs. 75 per mensem in the case of Headmasters of Secondary Schools. This is also subject to a minimum of Rs. 20 per mensem.

(b) Yes.

திரு. டி. கார்ச்சா கவுடர்: மத்திய சர்க்காரிலே ஊழியர்கள் சர்விசிலே இருக்கும்போது இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்திற்கு உதவி கொடுக்கிறார்களே, அந்த மாதிரி நமது சென்னை அரசாங்கமும் சர்விசில் இருக்கும் ஊழியர் இறந்தால் அவர் குடும்பத்திற்குப் பென்ஷன் கொடுக்கும் திட்டம் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அத்தகையோருக்கும் உதவி அளிக்க அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டுதான் இருக்கிறது.

ஆசிரியர் சேம நிதி

* 143 கேள்வி.—திரு. எல். ஆனந்தன்: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி வட்டம், மான்ய பள்ளிகளில் பணி புரிந்து பின்னர் வேறு நிர்வாகத்திற்குச் சென்றுவிட்ட ஆசிரியர்கள் எத்தனை பேர்களுக்கு, தற்பொழுது கட்டிவரும் Provident Fund -ல் முன்பு செலுத்தப்பட்ட Teachers' Provident Fund தொகையை மாற்றாமல் இருக்கிறது ?

(இ) அதற்கான காரணம் என்ன ?

(உ) தற்பொழுது மாற்றும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

* 144 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether it is a fact that there is delay in disbursing to the teachers, on their retirement, the amount, standing to their credit in the Teachers' Provident Fund together with the Government contribution; and

(b) if so, the steps taken to avoid the delay?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b): It is possible that there are a few cases of delay. Expeditious action is always taken to settle the Provident Fund accounts of teachers. Necessary instructions to the Inspecting Officers have been issued in this regard.